# ரவியின் சந்திரன்

- மைக்கேல்.

28 வயதிலேயே மிகப் பெரிய பதவியை எட்டிய ரவிச்சந்திரன் ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள் விஞ்ஞானி. படிக்கும் காலத்திலும் ஆராய்ச்சிக்காக மேல்நாடு போயிருந்த போதும் அவனது புத்திக்கூர்மை எல்லோரையும் அலறச் செய்தது. உலக அளவில் அவர் மேல் இருக்கும் மதிப்பும் பொறாமையும் அவருக்கு ஒரு கவர்ச்சியைக் கொடுத்திருந்தது.

கிறிஸ்தவர்கள் அவரைத் தங்கள் கூட்டங்களில் பேச அழைப்பார்கள். பகுத்தறிவாளர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்களும் அவரைத் தங்கள் கூட்டங்களில் பயன்படுத்திக்கொள்வார்கள். இடத்துக்கேற்றபடி தொப்பிகளை மாற்றிப் பேசி, கேட்பவர்களைக் கட்டிப்போடும் மந்திரம் அவனது பேச்சுக்கும் அறிவுக்கும் இருந்தது. இரு கூட்டத்தாருமே அவர் தங்கள் கட்சிக்கு வந்துவிடமாட்டாரா என்று ஏங்கிக்கொண்டிருக்க ஒரு காரணம் உண்டு.

உண்மையாகவே அவர் மனதில் இருக்கும் சிந்தனைகளை வெளிப்படையாகச் சொல்லிவிடுவார். ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டிருந்தாலும், சர்வதேச அளவில் பெரிய விஞ்ஞானி என்று உயர்ந்திருந்தாலும் திருப்தியான விடை கிடைக்காத ஒரு கேள்வி ஒன்று அவரைக் குடைந்து கொண்டிருந்தது.

அறிவியல் துறையில் அதிக ஆழமாகப் போகும் போது எல்லாவற்றையும் படைத்தவர் கடவுள் என்றால் “கடவுளைப் படைத்தது யார்?” என்ற கேள்வி வருகிறது. ஆன்மீகத்தில் அதிக ஆழமாகப் போகும் போது உலகமும் சகலமும் தானாக ஒரு செல் உயிரியிலிருந்து அல்லது பெரிய நெருப்புக் கோளில் இருந்து உருவாகியிருந்தால் “அந்த செல்லை, கோளை உருவாக்கியது யார்?” என்ற கேள்வி அதிரச் செய்கிறது.

தனது எல்லா பேச்சுக்களின் நடுவிலும் இந்தக் கேள்வியைக் கேட்டு, பதில் தெரிந்தவர்கள் தயவு செய்து சொல்லுங்கள் என்று நேர்மையாக கேட்டுக்கொள்வார். பதில்கள் கிலோக்கணக்கில் தபால்களாக, மெகா பைட் கணகில் இ மெயில்களாகவும் அவருக்கு வந்திருக்கின்றன. ஆர்வமாக அனைத்தையும் படித்துக்கொண்டே இருக்கிறார்.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள், ஆன்மீகத் தலைவர்கள் ரவிச்சந்திரனைச் சந்தித்தும் திருப்தி கிடைக்கவில்லை. இன்னும் தொடர்கிறார் தனது தேடலை.

* * *

அன்று ஒரு சாதாரண நாள், இந்தியாவின் தகவல் தொடர்பு மற்றும் ராணுவ செயற்கைக் கோள் விண்வெளியில் செலுத்தப்படவேண்டிய நாள். உலக வல்லரசுகள் அதைத் தடுக்கச் செய்த எல்லா முயற்சிகளையும் தோற்கடித்து, தொழில்நுட்ப ரகசியத்தைத் தர மறுத்த மேற்கத்திய நாடுகளுக்கு சவாலாக ரவிச்சந்திரனின் குழுவினர் தயாரித்த முற்றிலும் இந்தியத் தயாரிப்பு ராக்கெட்டும், செயற்கைக் கோளும் விண்வெளியில் முளைத்தெழுந்து ஒரே நாளில் கனிதரவிருக்கிறது.

ரவிச்சந்திரன் பாதுகாப்பு வீரர்கள் சூழ தனது காரில் விரைந்து கொண்டிருக்கும் போது பக்கவாட்டிலிருந்து வந்த அந்த காரைக் கவனித்துவிட்டனர் பாதுகாப்பு வீரர்கள். ஆனால் அந்த கார் சாமார்த்தியமாக பாதுகாப்பு வீரர்களின் ஜீப்புகளைத் தவிர்த்து ரவிச்சந்திரனின் காரைக்குறி வைத்து வந்த து. டிரைவர் ஆறுமுகம் தனது திறமைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து செய்த முயற்சி அந்த சிறு மலையின் விளிம்பில் காரைக் கொண்டு செல்ல ரவிச்சந்திரன் தன் கண்களை மூடிக்கொண்டார். வாயிலோ மனதிலோ அந்த வினாடியில் கடவுளே என்ற வார்த்தையோ அம்மா என்ற வார்த்தையோ வரவில்லை. “டமார்” என்ற பெரிய வெடிச்சத்தம் பின்னால் கேட்க, சாவதற்காகக் கண்களை இன்னும் இறுக்கமாக மூடிக்கொண்டு காத்திருந்தார்.

‘‘சார் உங்களுக்கு ஒண்ணும் ஆகலியே?” என்று பதற்றத்துடன் வந்து காரின் பின் கதவைத் திறந்தார் டிரைவர் ஆறுமுக ம். அவர் கைகள் நடுங்கிக் கொண்டிருந்த ன. நான்கைந்து பாதுகாப்பு வீரர்கள் ரவியைச் சூழ்ந்து கொண்டு அடுத்த ஜீப்பில் ஏற்றிக் கொண்டிருக்க, ரவி திரும்பிப் பார்த்தா ர். அவரது காரைக் குறிவைத்து வந்த அந்தக் கார் மோதியிருந்த மரம் சாலையின் குறுக்கே விழுந்து கிடந்தது. மோதிய கார் முழுவதுமாக எரிந்து கொண்டிருந்த து. சிதறிய இரும்புப் பாகங்கள் சாலையில் குப்பையாகக் கிடந்தன.

வெற்றிகரமாக ஏவப்பட்ட ராக்கெட், சாட்டிலைட், தகவல் தொடர்பு அனைத்தும் அந்த விபத்தை மறந்து போக வைத்திருந்தாலும் ரவிச்சந்திரனின் மனதில் ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது அந்த விபத் து. வெளிநாட்டு சதி அந்த விபத்தில் இருப்பதாக சந்தேகப்பட்டு விசாரணை நடந்து கொண்டிருந்தது. காரை ஓட்டி வந்தவன் அடையாளம் தெரியாமல் கருகிப் போயிருந்ததாலும், எந்த தீவிரவாத அமைப்பும் அந்த விபத்துக்குப் பொறுப்பேற்காததாலும் பத்திரிக்கைகள் அந்த விபத்தை பெரிதுபடுத்தவில்லை.

* * *

ரவிச்சந்திரன் இரண்டு வார விடுப்பில் அந்தமானுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, மிக அவசரமாக இருந்தால் மட்டும் தொடர்பு கொள்ளத் தன் மொபைல் எண்ணைக் கொடுத்திருந்தார்.

அந்தப் பாறை எத்தனை ஆயிரம் வருஷங்களாக அங்கே இருந்திருக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தார் ரவிச்சந்திரன். அறிவியல் படி எத்தனையோ மில்லியன் வருடங்கள். பைபிள் படி சுமார் ஐந்தாயிரம் வருடங்க ள். ஆனாலும் அதன் மேல் ஏறி ஓடி விளையாடிக்கொண்டிருந்த நண்டுகள் அந்த பாறையைவிட மேலானது என்று நினைத்தார் ரவி. “உயிரில்லாதது எவ்வளவு பெரிசா இருந்தாலும் எத்தனை காலமா இருந்தாலும் உயிருள்ளதுங்க தானே அதை தங்களுக்கு சாதாகமா பயன்படுத்திக்குதுங் க?” தனக்குத்தானே சிரித்துக் கொண்டே, ஒரு சின்ன கல்லை எடுத்து நண்டு நின்று கொண்டிருந்த பகுதிக்கு அருகில் எரிந்தார். நண்டு சட்டென பாறைக்கு அடுத்த பக்கம் போய் மறைந்து கொண்டது.

* * *

‘‘எனக்கு ஏற்பட்ட விபத்து இன்னொருவனால் ஏற்பட்டது என்றாலும் நேரடியாக நான் பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டிருந்தால் இந்த நேரம் இங்கே நின்று கொண்டு இப்படி பேசிக் கொண்டிருக்க மாட்டேன் . ஆனால் அது தற்செயல் என்றும் சொல்ல முடியாது . எனது தினசரி செயல்கள் எல்லாவுமே கடிகாரத்தைப் போல சீராக ஓடிக்கொண்டிருந்தாலும் அதைத் திட்டமிட்டது எனது குழு தானே?

‘‘அப்படித்தான் இந்த உலகம் தானாகவே உருவாகியிருந்தாலும் கூட அதை துவக்கி வைத்திருக்க ஒரு சக்தி இருந்திருக்க வேண்டு ம். சக்தின்னா, பெட்ரோல், எலக்ட்ரிக் கரண்ட் மாதிரி ஷாக் அடிக்கற, மெஷின்கள ஓடவைக்கற சக்தி இல்ல . இண்டலிஜண்ட் பவர். மகா பெரிய ஞானமுள்ள சக்தி. உயிருள்ள சக்தி. உயிரை உருவாக்கற சக்தி. அது கடவுளத் தவிர வேற எதுவாகவும் இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன். ராக்கெட், சாட்டிலைட் எல்லாத்தையும் நாங்க செஞ்சோம் எங்க கிட்ட அதோட ப்ளான் இருக்குது . எத்தனையோ கோள்கள் சூரியன்கள் இந்தப் பிரபஞ்சதுல சுத்திக்கிட்டு இருக்குதே அதுக்கெல்லாம் ப்ளான் பண்ணி அதுங்கள சுத்தவிட்டது கடவுளாத்தானே இருக்க முடியும்? அதுங்களாவே ப்ளான் பண்ணிக்கிட்டு உருவாகி சுத்திட்டு இருக்குதுங்கன்னு என்னால் ஏத்துக்க முடியல.

‘‘சயன்ஸையும் பைபிளையும் எப்படி கலக்க முடியுதுன்னு கேக்கறீங்க . கலக்கறதுக்கு அது ரெண்டு தனித்தனியான பொருட்கள் இல்லீங்க. என்னப் பொறுத்தவரைக்கும் இரண்டுமே என்னோட ரெண்டு கண்ணுங்க மாதிரி . ஒண்ணு இல்லாட்டி கூட காட்சிகளுக்கு மூணாவது டைமன்ஷன் கிடைக்காது . எத்தனையோ உருப்படியான சயின்டிஸ்ட்டுகள் கடவுள் நம்பிக்கை உள்ளவங்க தான். நடுவுல வந்த சில கோமாளிங்க தான் தங்களோட கண்டுபிடிப்புகள பாப்புலராக்கறதுக்காக இப்படி கடவுள் இல்லைன்னு சொல்லியிருக்காங்கன்னு நினைக்கிறேன்.

‘‘எனக்குக் கூட கடவுள் நம்பிக்கையோட கூட ஒரு சந்தேகமும் இருந்தது . தேடிட்டு இருந்தேன் அதுக்கு பதிலும் கிடைச்சுது . அந்த விபத் து, ராக்கெட் லாஞ்சிங் , அந்தமான் ஹாலிடேஸ் இதுல எல்லாம் நான் அனுபவிச்சு அந்த உண்மையைப் புரிஞ்சுக்கிட்டேன்.

‘‘நான் யாருக்கும் பயப்படறவனும் கிடையாது , யாரையும் திருப்தி செய்யவேண்டிய அவசியமும் எனக்குக் கிடையாது . என்னோட நேர்மையான சந்தேகத்தை வெளிப்படையா சொல்லியிருந்தே ன். எனக்குத் திருப்தியான பதில் கிடைச்சப்புறம் அதை வெளியே சொல்றே ன். உங்கள்ல யாரையும் நான் என்னோட நம்பிக்கையை நீங்களும் ஏத்துக்கணும்னு வற்புறுத்தலியே? சந்தேகத்தைச் சொன்ன நான் அதுக்கு பதிலக் கண்டுபிடிச்சிடேன்னு சந்தோஷமா சொல்றேன்.

‘‘நீங்க நினைக்கற மாதிரி நான் பிரச்சாரம் செய்யப் போக மாட்டேன். என்னோட வாழ்க்கையே ஒரு பிரச்சாரம்னு நம்புறவன் நான் . எங்கிட்ட வந்து கேக்கறவங்களுக்கு என்னப்பத்தி நான் சொல்றது பிரச்சாரம்னு சொல்லமுடியாது இல்லியா?

‘‘பைபிள்ல சொல்ற ஆறு நாள் படைப்பை நான் சயன்டிஸ்ட்டா ஏத்துக்குறேன். அதே பைபிள் தான் கடவுளுக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலன்னு சொல்லு து. பரிணாம வளர்ச்சி தியரியில நிறைய ஓட்டைகள் இருக்குது . கடவுளே பரிணாம வளர்ச்சியை அனுமதிச்சிருக்கலா ம். ஒரு சயின்டிஸ்ட்டா பாக்கறப்பே ா, சயின்ஸ் பைபிள் இரண்டையும் ஒண்ணுக்கு ஒண்ணு எதிரியாப் பாக்காம பாலம் போட்டுப் பாக்கறேன் நான்.”

அந்தமானிலுள்ள அந்த சிறிய கலையரங்கத்தில் நடந்த சிறிய கூட்டத்துக்குப் பின் பல நாடுகளிலுமிருந்து வந்திருந்த சில நிருபர்கள் துருவித் துருவிக் கேள்விகள் கேட்க, பொறுமையாகப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார் இளம் விஞ்ஞானி ரவிச்சந்திரன்.

மறுநாள் விடுமுறையின் கடைசி நாள் பத்திரிக்கைகள் பலவகைகளில் செய்திகள் கொடுத்த ன. “விஞ்ஞானியின் மதப்பிரச்சார ம்”, “விஞ்ஞானியின் மனமாற்ற ம்”, “ஆன்மீகத்தையும் விஞ்ஞானத்தையும் கலந்த நவீன விஞ்ஞானி ” என்றெல்லாம் தலைப்புகள் உலகம் முழுவதிலும் வந்திருந்தன. மாலை நேரம் படகில் வந்து கொண்டிருந்த ரவிச்சந்திரன் சூரியன் மறைவதற்கு முன்பே உதித்து வந்த அந்த சந்திரனைத் தன் டிஜிட்டல் காமராவுக்குள் பிடித்து வைத்துக் கொண்டார்.